SPA தொடர்பானக் கேள்வி பதில்

1. மருத்துவத்துறையைச் சார்ந்த வேலைகளுக்குத் (எ.கா. தாதியர்) திருமணமானவர்கள் விண்ணப்பிக்க முடியுமா?

இந்தத் துறைக்கான வேலைக்குத் திருமணமானவர்கள் விண்ணப்பிக்க முடியாது என்று எந்த விளம்பரங்களில் குறிப்பிடப் படவில்லை. ஆகவே உங்களுக்கு விருப்பமிருந்தால் தாராளமாக விண்ணப்பிக்கலாம்.

2. நான் ஏன் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படவில்லை?

உங்கள் விண்ணப்பம் சில காரணங்களால் நேர்முகத் தேர்விற்குத் தேர்ந்தெடுக்கப் படாமல் இருந்திருக்கலாம். உதாரணமாக, இந்த வேலைக்கான நுழைவுத் தேர்வில் தேர்ச்சிப் பெறாமை மற்றும் அடிப்படைத் தகுதிகளான கணிதம் மற்றும் விஞ்ஞானப் பாடத்தில் (எஸ். பி. எம் ) சிறப்புத் தேர்ச்சி (kredit) அல்லது தேர்ச்சி (lulus) பெறாமையும் அடங்கும்.

3. நேர்முகத் தேர்வில் ஏன் என்னால் தேர்வாக முடியவில்லை?

பொதுவாக, நேர்முகத் தேர்வின் போது உங்களது தோற்றம், வேலைத் தொடர்பான விசயஞானம், தேவையான அத்தாட்சிப் பத்திரங்களை உடன் கொண்டு வருதல் மற்றும் உங்கள் ஆளுமை போன்றவை கருத்தில் கொள்ளப்படும். உங்களின் நேர்முகத் தேர்வின் அடைவு நிலை மன நிறைவளிக்காத பட்ச்சத்தில் நீங்கள் தேர்வாகாமல் போகலாம்.

4. அரசாங்க வேலை செய்து கொண்டிருப்பவர்கள் இணையத்தின் மூலம் விண்ணப்பிக்க முடியுமா?

முடியும். நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படும்போது, தங்கள் மேலதிகாரியிடமிருந்து அனுமதிக் கடிதம் பெற்றுச் செல்ல வேண்டும்.

5. எனது விண்ணப்பம் ஏன் நிராகரிக்கப் படுகிறது?

உங்கள் விண்ணப்பப் பாரங்களை முறையாகவும், முழுமையாகவும் பூர்த்தி செய்யாதப் பட்சத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம் :-

.

**கடிதப் போக்கு வரத்து முகவரி**

1. என்னுடைய முகவரி மற்றும் நேர்முகத் தேர்வு மையத்தை மாற்ற விரும்பினால் என்ன செய்ய வேண்டும்?

பின்வரும் முகவரிக்கு நீங்கள் கடிதம் எழுதலாம். Setiausaha Suruhanjaya Perkhidmatan Awam Malaysia, Aras 6-10, Block C7, Kompleks C, Pusat Pentadbiran Kerajaan Persekutuan 62520 Putrajaya அல்லது http://aduan.spa.gov.my/aduan/index.asp என்ற அகப்பக்கத்திற்குச் சென்று மின்னஞ்சல் அனுப்பலாம். கடிதம் அல்லது மின்னஞ்சலில் உங்கள் பெயர், அடையாள அட்டை எண் மற்றும் உங்கள் நோக்கம் போன்றவை குறிப்பிடப் பட்டிருக்க வேண்டும். கடிதம் அனுப்பினால் கையொப்பம் இட்டிருக்க வேண்டும்.

**பதிவு ஒப்புதல் கடிதம்**

1. பதிவு ஒப்புதல் கடிதம் கிடைத்தப் பின், நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட எவ்வளவு காலமாகும்?

அமைச்சு மற்றும் ஏனைய அரசு நிறுவனங்களில் வேலைகளுக்கான காலியிடங்கள், தோன்றும் போது அவை SPA- விடம் தெரிவிக்கும். இதைப் பொறுத்தே SPA நேர்முகத் தேர்விற்கு ஏற்பாடு செய்யும். விண்ணப்பிக்கும் வேலைக்கான நிபந்தனைத் தகுதிகளை நீங்கள் கொண்டிருக்க வேண்டும். மேலும் அடிப்படைத் தேர்வில் தேர்ச்சி பெறுதல் அவசியம். இத்தகைய காரணங்களைப் பொறுத்தே நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படும் கால அளவு அமையும்.